அவ்வகையில், இந்தாண்டுக்கான திருப்புகழ் திருப்படித் திருவிழா, இன்று (31-ம் தேதி) காலை தொடங்குகிறது. நாளை (1-ம் தேதி) வரை, 2 நாட்கள் நடைபெற இருக்கிற இத்திரு விழா வில், இன்று காலை 8 மணியளவில், திருத்தணி மலையடிவாரத்தில் சரவணப் பொய்கை அருகே உள்ள கோயிலின் முதல் படியில், திருப்புகழ் திருப்படி பூஜை தொடங்குகிறது.

படியில் மஞ்சள் குங்குமம் பூசி வெற்றிலை பாக்கு, பூக்கள், பழங்கள் வைத்து கற்பூரம் ஏற்றி தேங்காய் உடைத்து, திருப்புகழ் பாடலுடன் நடைபெற உள்ள இந்த பூஜை, மலையடிவாரம் முதல், கோயில் வரை உள்ள 365 படிகளிலும் நடைபெற உள்ளது. நாளை மாலை வரை இந்த திருப்படி பூஜை நடைபெற உள்ளது.

மேலும், இத்திருவிழாவில், இன்று காலை 11 மணிக்கு வெள்ளி மயில் வாகனத்திலும், நாளை இரவு 8 மணிக்கு தங்கத் தேரிலும் சுப்பிரமணிய சுவாமி வீதி உலா சென்று, பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

திருப்புகழ் திருப்படித் திரு விழாவை முன்னிட்டு, இன்று காலை முதல் நாளை இரவு வரை, கோயில் வளாகத்தில் பல் வேறு குழுவினர்களால் திருப் புகழ் பாடல்கள் தொடர்ந்து பாடப்பட உள்ளது.

கோயில் நடை திறப்பு

அதுமட்டுமின்றி, இன்று காலை முதல், நாளை இரவு 9 மணி வரை கோயில் நடை திறந்திருக்கும் என, திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சோமாஸ்கந்தர் சிலை தங்கம் முறைகேடு வழக்கு

9 பேருக்கு குற்றப்பத்திரிகை நகல்

காஞ்சிபுரம்

ஏகாம்பரநாதர் கோயிலுக்கு சோமாஸ்கந்தர் சிலை செய்த தில், தங்கம் முறைகேடு செய் ததாகத் தொடரப்பட்ட வழக் கில், குற்றம் சாட்டப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் உள்பட 9 பேருக்கு குற்றப்பத்திரிகை நகல் வழங் கப்பட்டது.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் இருந்த 1,200 ஆண்டுகள் பழமையான சோமாஸ்கந்தர் உற்சவர் சிலை சேதமடைந்ததாகக் கூறி, 2015-ம் ஆண்டில் புதிய சிலைகள் செய்யப்பட்டன. இதற்காகப் பக் தர்களிடம் இருந்து பல கிலோ தங்கம் மற்றும் பணம் வசூலிக் கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனால், புதிதாகச் செய்யப் பட்ட சோமாஸ்கந்தர், ஏலவார் குழலி அம்மன் ஆகிய இரு சிலைகளிலும் தங்கம் சேர்க்கப் படவில்லை எனப் புகார் எழுந் தது.

சிலைகளில் தங்கம் இல்லை

இது தொடர்பாக, முன்னாள் ஐ.ஜி. பொன் மாணிக்கவேல் தலைமையிலான சிலை கடத் தல் தடுப்புப் பிரிவு போலீஸார் விசாரணை நடத்தினர். விசா ரணையின் போது, அவர்கள் நடத்திய சோதனையில், புதிய சிலைகளில் தங்கம் சிறிதும் இல்லை என்பது உறுதி செய் யப்பட்டது.

இது தொடர்பாக, இந்து சமய அறநிலையத் துறை முன்னாள் ஆணையர் வீரசண் முகமணி, கூடுதல் ஆணையர் கவிதா உள்பட 9 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர். பின்னர், நீதிமன்ற உத்தரவுப் படி இந்த வழக்கை சிவகாஞ்சி போலீஸார் விசாரித்து வந் தனர். இந்தச் சூழ்நிலையில், இந்த வழக்கு காஞ்சிபுரம் குற் றவியல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் ஆணையர் வீரசண்முகமணி, தற்போதைய கூடுதல் ஆணை யர் கவிதா உள்பட 9 பேரும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். அவர்களுக்கு வழக்கின் 300-க்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை நகல்கள் வழங்கப்பட்டன.

இதையடுத்து, இந்த வழக் கின் அடுத்தக்கட்ட விசாரணை ஜன. 5-ம் தேதிக்கு ஒத்திவைக் கப்பட்டது.

புதிதாகச் செய்யப்பட்ட இரு சிலைகளிலும் மொத்தம் 8.7 கிலோ தங்கம் இருக்க வேண்டும் என்பதும், அதில் முறைகேடு நடந்துள்ளது என் றும் அப்போது விசாரணை நடத்திய சிலை கடத்தல் தடுப் புப் பிரிவின் குற்றச்சாட்டாக இருந்தது.

விசாரணை மீது அதிருப்தி

இதன் அடிப்படையிலேயே வழக்குப் பதிவு செய்யப்பட் டது. ஆனால், சிலை கடத் தல் தடுப்புப் பிரிவின் விசா ரணை மீது அதிருப்தி அடைந்த சென்னை உயர்நீதிமன்றம், இந்த வழக்கை மீண்டும் சிவ காஞ்சி போலீஸார் விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இதன் அடிப்படையில், இந்த வழக்கை சிவகாஞ்சி போலீ ஸார் தற்போது விசாரித்து வரு கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

காஞ்சிபுரம் நகராட்சி, பேரூராட்சிகளுக்கு

விளையாட்டு உபகரணங்கள்

அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் நகராட்சி, பேரூ ராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை, அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் இளை ஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில், கலைஞர் விளையாட்டு உப கரணங்கள் வழங்கும் திட்ட விழா நேற்று நடைபெற்றது.

தமிழக துணை முதலமைச் சர் உதயநிதி ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்தில் இத்திட்டத் தைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, காஞ்சிபுரத்தில் இந்த விழா நடைபெற்றது.

இந்த விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி தலைமை தாங்கினார். கைத் தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பங்கேற் று, நகராட்சி மற்றும் பேரூ ராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார் பில், ஏற்கெனவே, முதற்கட்டமாக 5 வட்டங்களுக்கு உட்பட்ட 274 கிராம ஊராட்சிகளுக்கு 335 விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

156 வார்டுகளுக்கு..

அதன் தொடர்ச்சியாக தற் போது, காஞ்சிபுரம் மாநகராட் சியின் 51 வார்டுகளுக்கு 153 உபகரணங்களும், குன்றத் தூர் நகராட்சிக்கு 60, மாங் காடு நகராட்சிக்கு 54, ஸ்ரீபெரும் புதூர் நகராட்சிக்கு 30, உத் திரமேரூர் பேரூராட்சிக்கு 18 மற்றும் வாலாஜாபாத் பேரு ராட்சிக்கு 15 என மொத்தம் 156 வார்டுகளுக்கு 330 விளை யாட்டு உபகரணத் தொகுப்பு களை அமைச்சர் வழங்கினார்.

இந்த விழாவில், காஞ்சிபுரம் எம்.பி. க.செல்வம், எம்எல்ஏ-க் கள் க.சுந்தர் (உத்திரமேரூர்), சி.வி.எம்.பி.எழிலரசன் (காஞ் சிபுரம்), மாநகராட்சி மேயர் எம். மகாலட்சுமி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் மலர்க்கொடி குமார், சரஸ்வதி மனோகரன் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநி திகள் உள்பட பலர் பங்கேற் றனர்.

செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரி 21-ம் ஆண்டு விளையாட்டு தின விழாவின்போது, வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பதக்கம், சான்றிதழ் வழங்கப்பட்டது.

மனைவியை கொன்ற கணவருக்கு ஆயுள் சிறை

செங்கல்பட்டு

சென்னை, கண்ணகி நகரை சேர்ந்தவர் ஆறுமுகம் (65), இவரது மனைவி கஸ்தூரி (54). ஆறுமுகத்திற்கு மனைவி மீது சந்தேகம் இருந்து வந்துள்ளது. இதனால், அடிக்கடி மனைவி கஸ்தூரியிடம் தொடர்ந்து சண் டையிட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மனைவி கஸ்தூரியின் நடத் தையில் சந்தேகப்பட்ட கணவர் ஆறுமுகம் அவருடன் சண்டை போட்டுள்ளார். அப்போது, ஆத்திரம் அடைந்த ஆறுமுகம் மனைவியை காய் நறுக்கும் கத்தியால் கஸ்தூரியை வெட் டினார். இதில் படுகாயமடைந்த கஸ்தூரி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இது தொடர்பாக, கண் ணகி நகர் போலீஸார் வழக்கு பதிவு செய்து செங்கல்பட்டு மகிளா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அரசு தரப்பில் வழக்கறிஞர் சசிகலா லோக நாதன் ஆஜரானார்.

இந்த வழக்கின் மீதான விசா ரணை நிறைவு பெற்ற நிலை யில், ஆறுமுகம் மீது சுமத் தப்பட்ட அனைத்து குற்றச் சாட்டுகளும் உறுதியானதால் அவருக்கு, செங்கல்பட்டு மகிளா நீதிமன்ற நீதிபதி எழில் அரசி குற்றவாளியான ஆறு முகத்திற்கு ஆயுள் தண்டனை யும், ரூ.3 ஆயிரமும் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியில்

21-ம் ஆண்டு விளையாட்டு தின விழா

சென்னை

செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் 21-ம் ஆண்டு விளையாட்டு தின விழா நடைபெற்றது.

செங்கல்பட்டு துணை வட் டாட்சியர் எஸ்.மாலதி கெலன், சென்னை பல்கலை. கல்லூரி மேம்பாட்டு மன்ற முதன்மை அதிகாரி (பொறுப்பு) எஸ்.எ.த தம்குமார் ஜமதக்னி ஆகியோர் தலைமை விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

விருந்தினர்கள் விழாவைத் தொடங்கிவைத்து பேசும்போது, "மாணவிகள் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பையும் சுதந் திரத்தையும் நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண் டும். கனவுகளை சாதனை களாக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். உடற்பயிற்சி மிக வும் முக்கியம்" என்று கூறினார்.

பின்னர் மாணவிகளின் அணி வகுப்பு நடைபெற்றது. விளை யாட்டுத் துறை தலைவி மினம் தயங் ஒலிம்பிக் ஜோதியை ஏற் றினார். வித்யாசாகர் மகளிர் கல்லூரியின் உடற்கல்வி பேராசிரியர் எஸ்.சங்கீதா விளை யாட்டுத் துறையின் ஆண்டறிக் கையை வாசித்தார்.

பல்வேறு விதமான விளை யாட்டுப் போட்டிகள் நடத்தப் பட்டு அதில் வெற்றி பெற்ற மாணவிகள் 450 பேருக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. விளையாட் டுத் துறையில் சிறந்து விளங் கிய 50 மாணவிகளுக்கு விளை யாட்டு உதவித்தொகை நிர்வாக குழுமத்தின் சார்பாக வழங்கப் பட்டது. தனிநபர் வெற்றிக் கே டயத்தை மாணவி ம.பதிபூரணம் வென்றார். ஒட்டு மொத்த வெற் றிக் கேடயத்தை அன்னை ராணி ஹவுஸ் வென்றது.

இந்நிகழ்ச்சியில் வித்யாசாகர் கல்விக் குழுமத்தின் தாளாளர் விகாஸ் சுராணா, எம்டவர்மென்ட் முதல்வர் கே.மாரிசாமி, கல்லூரி முதல்வர் இரா.அருணாதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டில் வங்கி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

செங்கல்பட்டு

வாரத்துக்கு 5 நாட்கள் வேலை என்ற கோரிக்கையை வலி யுறுத்தி, வங்கி ஊழியர் சங் கங்களின் ஒருங்கிணைந்த கூட் டமைப்பு சார்பில், செங்கல்பட் டில் நேற்று கண்டன ஆர்ப்பாட் டம் நடைபெற்றது.

செங்கல்பட்டு நகரில் நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தில், பொதுத் துறை வங்கிகள், மத்திய கூட் டுறவு வங்கிகள், தனியார் வங் கிகள் ஏற்கனவே, 2 மற்றும் 4-ம் சனிக்கிழமை விடுமுறை உள்ள நிலையில், மாதத்தில் உள்ள அனைத்து சனிக்கிழமைகளிலும் விடுமுறை வழங்க வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப் பட்டது. ஆர்ப்பாட்டத்தில், வங்கி ஊழியர் சங்கங்களின் ஒருங் கிணைந்த கூட்டமைப்பு மாவட்ட தலைவர் ஏழுமலை, மாவட்ட செயலாளர் அனிருத், வங்கி நிர் வாகிகள் காமேஷ் பெருமாள், வினோத் குமார் மற்றும் நிர் வாகிகள் உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

பூந்தமல்லி கிளை:
எண்.9, சன்னதி தெரு, பூந்தமல்லி, சென்னை-600056
Ph: 044-26272193, 9444050935
Email:cb0935@canarabank.com

Canara Bank கனரா வங்கி A Government of India Undertaking
Syndicate சிண்டிகேட்

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு [Section 13(4)]

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம். 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன்(Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Act 54 of 2002) (hereinafter referred to as "the Act") மற்றும் விதி 3ன்படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் கனரா வங்கியின் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டத்தின் 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன் கீழ் **கடன்தாரர்கள் M/s.ப்ரூக் புட்ஸ் & பிவ்ரேஜஸ்** (M/s Brook Foods & Beverages) (அதன் சார்பாக உரிமையாளர் Mr.ஸ்ரீராமன் முனிரத்தினம், S/o.Mr.முனிரத்தினம்), எண்.7/77, அன்னை அஞ்சும் நகர், 61- நந்தம்பாக்கம், குன்றத்தூர், சென்னை - 600069, (இனி இவர் கடன்தாரர் என அழைக்கப்படுவார்) **உரிமையாளர் & அடமானதாரர்: Mr.ஸ்ரீராமன் முனிரத்தினம்,** S/o.Mr.முனிரத்தினம், எண்.48, சித்தர் கோயில் தெரு, கோவிந்தராஜ் நகர், பட்டூர், மாங்காடு அஞ்சல், மாங்காடு, காஞ்சிபுரம் மாவட்டம் - 600122 ஆகியோருக்கு **22.10.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில்** குறிப்பிடப்பட்ட கடன்தொகையான ₹**1,44,49,506.95** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து நான்கு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று ஆறு மற்றும் பைசா தொண்ணூற்று ஐந்து மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8 & 9-ன் படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 26.12.2025 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக உடைமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரர் அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது கனரா வங்கி, பூந்தமல்லி கிளைக்கு வர வேண்டிய கடன் தொகையான 13.12.2025 அன்றுள்ளபடி ₹ 1,47,90,639.14** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தேழு லட்சத்து தொண்ணூறாயிரத்து அறுநூற்று முப்பத்து ஒன்பது மற்றும் பைசா பதினான்கு மட்டும்) **மற்றும் வட்டிக்கு கட்டுப்பட்டவை என்றும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

சொத்தின் உரிமையாளர் Mr.ஸ்ரீராமன் முனிரத்தினம் S/o.Mr.முனிரத்தினம் (M/s ப்ரூக் புட்ஸ் & பிவ்ரேஜஸ்-ன் உரிமையாளர்) தென் சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.948/1A1, பட்டா எண்.8937 படி புதிய சர்வே எண்.948/1A1A, **மனை எண்.15, "சுப்பிரமணியபுரம்" என பெயரிடப்பட்ட லேஅவுட்,** உரிய அதிகாரியிடமிருந்து அனுமதி அளிக்கப்பட்ட PPD/LO. No. 110/2022 மற்றும் கட்டிட அனுமதி எண்.179/BL/2023/00460, கட்டிட ஒப்புதல் எண்.179/BPA/2023/00573, **குன்றத்தூர் கிராமம் (குன்றத்தூர் - A கிராமம்), குன்றத்தூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்** என்னும் முகவரியில் **958 சதுர அடி (89.06 சதுர மீட்டர்) நிலம், அதிலுள்ள 970 சதுர அடி குடியிருப்பு தனி வீடு,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 7.2 மீட்டர் ரோடு, தெற்கு: மனை எண்.30, கிழக்கு: மனை எண்.16, மேற்கு: மனை எண்.14. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 20 அடி (6.1 சதுர மீட்டர்), கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 20 அடி (6.1 சதுர மீட்டர்), வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 48 அடி (14.6 சதுர மீட்டர்), வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 48 அடி (14.6 சதுர மீட்டர்).

தேதி : 26.12.2025
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

U GRO கேப்பிட்டல் லிமிடெட்
4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், LBS சாலை, கூர்லா, மும்பை 400070

சுவாதீன அறிவிப்பு இணைப்பு IV (விதி 8(1) பார்க்கவும்) (அசையா சொத்திற்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள **UGRO கேப்பிட்டல் லிமிடெட்** அதன் பதிவு அலுவலகம், 4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், LBS சாலை, கூர்லா, மும்பை 400070-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பத்திர வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (2002-ன் 54)-ன்கீழ் மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002-ன் பிரிவு 13(12) உடன் சேர்த்துப் படிக்கப்பட்ட விதி 3-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்துமாறு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார்.

கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கையொப்பமிட்டவர், 2002-ஆம் ஆண்டு பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகளின் விதி 8 உடன் படிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப் பிரிவு (4)-ன்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை கீழ்குறிப்பிட்டுள்ள தேதியன்று சுவாதீனம் செய்துள்ளார் என்பதை கடன்தாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிப்பதாவது, சொத்தை எந்தவகையிலும் கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் சொத்து உடன் எந்தவொரு பரிவர்த்தனையும் வைத்துக்கொள்ளக் கூடாது, அவ்வாறு செய்தால் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை அதனுடன் வட்டியும் சேர்த்து **UGRO கேப்பிட்டல் லிமிடெட்**-க்கு செலுத்துவதற்கு உட்பட்டது. பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்ள சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப் பிரிவு (8)-ன் விதிகளுக்கு கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் விவரம்	கோரிக்கை அறிவிப்பு	அடமான சொத்து	சுவாதீனம் நாள்
1.	1. V.J JUICE CORNER AND V.J HOTEL (கடன்தாரர்) 2. வடிவேல் ஜானகிராமன் (இணை-மனுதாரர்) 3. ஜானகிராமன் அஜித்குமார் (இணை-மனுதாரர்) 4. ஜானகிராமன் அமுதவள்ளி (இணை-மனுதாரர்) கடன் கணக்கு எண். : UGBANSS0000048987	கோரிக்கை அறிவிப்பு நாள் 10.01.2025 தொகை ரூ. 26,61,085.49/- (ரூபாய் இருபத்தி ஆறு இலட்சத்து அறுபத்தி ஓராயிரத்து எண்பத்தி ஐந்து மற்றும் பைசா நாற்பத்தி ஒன்பது மட்டும்) 10.01.2025 அன்றைய தேதியில்	அசையா சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், வாலாஜாபாத் சார் பதிவாளர் அலுவலகம், 173, தேவரியம்பாக்கம், கிராமம் புஞ்சை, ச.எண். 206/1E 2, சொத்து அளவுகள் ஏக்கர் 0.05 சென்ட்ஸ் (2180 சதுர அடி) மற்றும் பட்டா எண். 638 துணைபிரிவு, ச.எண். 206/1E 2A உட்பட, **சொத்தின் எல்லைகள் :** கிழக்கு- சேகரி, வெங்கடேசலு மற்றும் சீனிவாசா ராவ் மனை, வடக்கு - கால்வாய், மேற்கு - ரவிச்சந்திரன் மனை, தெற்கு - வாலாஜாபாத்திலிருந்து வண்டலூர் நெடுஞ்சாலை.	29.12.2025

இடம் : தமிழ்நாடு
நாள்: 31.12.2025

Sd/- (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
UGRO கேப்பிட்டல் லிமிடெட்-க்காக

U GRO கேப்பிட்டல் லிமிடெட்
4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், LBS சாலை, கூர்லா, மும்பை 400070

கோரிக்கை அறிவிப்பு

நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002 ("சட்டம்") மற்றும் விதிகள் மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்")-ன்கீழ்

கீழே கையொப்பமிட்டுள்ள **UGRO கேப்பிட்டல் லிமிடெட்**-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், சட்டத்தின் பிரிவு 13(2) ன்கீழ் பிரிவு 3-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டத்தின் பிரிவு 13(2)-ன்கீழ் கோரிக்கை அறிவிப்பு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கடன்தாரர்(கள்) குறிப்பிட்ட தொகையைச் செலுத்த அந்தந்த கோரிக்கை அறிவிப்பில், கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அந்தந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பை(களை) வாங்குவதை தவிர்க்கிறார்கள் என்று கீழே கையொப்பமிட்டவர் நியாயமாக நம்புகிறார், எனவே கோரிக்கை அறிவிப்பின் சேவை விதிகளின்படி இணைத்து செய்தித்தாளில் வெளியிடுவதன் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ.எண்.	கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை
1.	1) MAGIC MUG (கடன்தாரர்) 2) மாதவன் பாபிதா (இணை-மனுதாரர்) 3) J விமல் ராஜ் (இணை-மனுதாரர்) LAN – UGNGPTH0000008181	**கோரிக்கை அறிவிப்பு நாள்: 23.06.2025 அறிவிப்பு தொகை: ரூ.86,36,316.00/-** (ரூபாய் எண்பத்தி ஆறு இலட்சத்து முப்பத்தி ஆறாயிரத்து முன்னூற்றி பதினாறு மட்டும்) **23.06.2025 தேதியில்**

பாதுகாப்பு சொத்து(கள்) விவரம்:- அசையா சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், கதவு எண்கள். 29, 29A, 298 & 29C, முடிச்சூர் சாலை, பெருங்களத்தூர், சென்னை 600 063, பெருங்களத்தூர் கிராமம், தாம்பரம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்த சர்வே எண். 296/5, பட்டா எண். 1695 பட்டாவின்படி புதிய துணை பிரிவு சர்வே எண். 296/5ஏ, அளவுகள் 3,783 சதுர அடி, ஒப்புதல் P.P.No.123/96-97, in Lr.No.46/96-97 நாள் 27.02.1997-ன் D.Dis.No.46/97/A1, நாள் 22.01.1997, B.A.No.129/96-97, நாள் 27.02.1997 அத்துடன் அதில் கட்டிடம் மற்றும் வசதிகள் மற்றும் நிலம் **எல்லைகள்: வடக்கில் :** முடிச்சூர் சாலை, **தெற்கில் :** திரு. A. மகாதேவன் அவர்களுக்கு சொந்தமான சொத்து, **கிழக்கில் :** திரு. ராஜி அவர்களுக்கு சொந்தமான சொத்து, **மேற்கில் :** திரு. சண்முகம் அவர்களுக்கு சொந்தமான சொத்து. **அளவுகள்** கிழக்கிலிருந்து மேற்கு வடக்கு பக்கம் : 451/2 அடி கிழக்கிலிருந்து மேற்கு தெற்கு பக்கம் : 40 அடி வடக்கிலிருந்து தெற்கு கிழக்கு பக்கம் : 96 அடி வடக்கிலிருந்து தெற்கு மேற்கு பக்கம் : 81 அடி.

கடன்தாரர்(கள்) கோரிக்கை அறிவிப்பு(களை) கடைப்பிடித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைத் தொகையையும், இங்கு குறிப்பிட்டுள்ள கோரிக்கைத் தொகையையும், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள், பொருந்தக்கூடிய வட்டி, தாமதமாக செலுத்தும் அபராதம், கட்டணங்கள், செலவு மற்றும் செலவினங்கள் போன்றவற்றுடன், பணம் செலுத்தப்படும் தேதி வரை செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். UGRO கேப்பிட்டல் லிமிடெட் ஒரு பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநர் என்பதையும், கடன்தாரர்(கள்) பெறும் கடன் வசதி **UGRO கேப்பிட்டல் லிமிடெட்** உடன் கடன்தாரர்(கள்) அடமானம் வைத்த பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்) இருப்பதற்கான பாதுகாக்கப்பட்ட கடனாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

கடன்தாரர்(கள்) குறிப்பிட்ட காலத்திற்குள் தங்கள் பொறுப்புகளை முழுமையாக நிறைவேற்றத் தவறினால் **UGRO கேப்பிட்டல் லிமிடெட்**, சட்டத்தின் பிரிவு 13(4)-ன்கீழ் பாதுகாக்கப்பட்ட சொத்து(களை) கையகப்படுத்த அனைத்து உரிமைகளையும் பயன்படுத்த உரிமை உண்டு, இதில் விற்பனை மூலம் அல்லது சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின்கீழ் கிடைக்கும் வேறு ஏதேனும் தீர்வைப் பயன்படுத்தி கடன்தாரரின் கடன் கணக்கில் நிலுவைத் தொகையை வசூலிக்க முடியும். **UGRO கேப்பிட்டல் லிமிடெட்,** விற்பனை அல்லது பரிமாற்ற உரிமையைச் செயல்படுத்துவதற்கு முன் பாதுகாக்கப்பட்ட சொத்து(களை) **இணைக்கவும் மற்றும் /அல்லது சீல்** செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. பாதுகாக்கப்பட்ட சொத்து(களை) விற்பனை செய்த பிறகு பாதுகாக்கப்பட்ட சொத்தின்(களை) கடன்தாரர்(கள்) **UGRO கேப்பிட்டல் லிமிடெட்**-க்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை ஈடுகட்ட போதுமானதாக இல்லாவிட்டால், மீதமுள்ள நிலுவைத் தொகையை மீட்டெடுக்க **UGRO கேப்பிட்டல் லிமிடெட்**-க்கு தனி சட்ட நடவடிக்கைகளைத் தொடங்க உரிமை உண்டு. இந்த தீர்வு கூடுதலாகவும், வேறு எந்த சட்டத்தின்கீழும் **UGRO கேப்பிட்டல் லிமிடெட்**-க்கு அனைத்து தீர்வுகளிலிருந்து சுயாதீனமாகவும் உள்ளது.

பாதுகாக்கப்பட்ட சொத்தை மீட்டுக்கொள்ள கிடைக்கக்கூடிய நேரத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் பிரிவு 13(8) மற்றும் சட்டத்தின் பிரிவு 13(13) ஆகியவற்றை கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது, இதன் மூலம் கடன்தாரர் பாதுகாக்கப்பட்ட சொத்தை அப்புறப்படுத்துவதிலிருந்தோ அல்லது கையாளுவதிலிருந்தோ அல்லது விற்பனை, குத்தகை அல்லது வேறு வழியில் (சாதாரண வணிகப் போக்கைத் தவிர) மாற்றுவதிலிருந்தோ தடைசெய்யப்படுகிறார்கள்/தடுக்கப்படுகிறார்கள், மேலும் **UGRO கேப்பிட்டல் லிமிடெட்**-ன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் எந்தவொரு பாதுகாக்கப்பட்ட சொத்து(களை) கையாள தடைசெய்யப்படுகிறார்கள், மேலும் இந்த விதிமுறைகளுக்கு இணங்காதது சட்டத்தின் பிரிவு 29-ன்கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்பின் நகல் கீழே கையொப்பமிட்டவரிடம் உள்ளது, மேலும் கடன்தாரர்(கள்) விரும்பினால், கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அதைப் பெறலாம்.

இடம் : சென்னை
நாள்: 31.12.2025

Sd/- (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
UGRO கேப்பிட்டல் லிமிடெட்-க்காக, authorised.officer@ugrocapital.com

புத்தாண்டின்போது இடையூறு ஏற்படுத்தினால் நடவடிக்கை செங்கை எஸ்.பி. எச்சரிக்கை

மாமல்லபுரம்

செங்கல்பட்டு மாவட்ட எஸ்.பி.சாய் பிரணீத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

புத்தாண்டு கொண்டாட்டங்கள் இன்று இரவு முதல் தொடங்க இருப்ப தால், பாதுகாப்பான புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக ஈசிஆர் சாலை, ஓஎம்ஆர் சாலையில் சோதனை சாவடிகள் அமைத்து போலீஸார் வாகன தணிக்கையில் ஈடுபடுவார்கள்.

பொது இடங்களில் மது அருந் துவோர் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவோர், வாக னங்களை அதிக சத்தத்துடன் இயக் கும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுதொடர்பாக, 7200102104, 044-29540888, 044-29540555, 29540777 ஆகிய தொலைபேசி எண்ணுக்கு தொடர்புகொண்டு பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம்.

அரசியல், சமூக அமைப்புகள் செய்திகளை அனுப்பலாம். மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

பொது அறிவிப்பு

காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், நெ. 65, வையாவூர் கிராமத்தில் வசிக்கும் காலஞ்சென்ற திரு. வேலு அவர்களின் மகன் கோவிந்தசாமி 57 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துகொள்வது, எனது தந்தை பெயரில் உள்ள ஆவணம் எண். 65 வையாவூர் கிராமம், தர்மநாயக்கன்பட்டரை கிராம நத்தம் பட்டா எண். 223, அதன் சர்வே எண் 531 3/22, பழைய சர்வே எண். 531/3பா ஆகும். மேற்படி பட்டா காப்பியான அசலை கடந்த 06.05.2024 அன்று காலை 10.30 மணியளவில் காஞ்சிபரம் பேருந்து நிலையத்தில் கவனகுறைவால் துலைந்துவிட்டது. யாரேனும் அதனைகண்டுபிடித்தால் 9444438469 கைபேசி எண்ணிற்கோ அல்லது மேற்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். –மனுதாரர்

இந்தியா நிப்பான் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
CIN : L31901TN1984PLC011021
பதிவு அலுவலகம் : எண். 11 & 13, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002. போன் : 044-28460073.
இணையதளம் : www.indianippon.com இமெயில் : investors@inel.co.in

காகித வடிவிலான பங்கு பரிமாற்ற கோரிக்கை மனு சமர்ப்பிப்பு தொடர்பான சிறப்பு சாளர அறிவிப்பு

ஜூலை 2, 2025 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண். SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97ன்படி, இந்தியா நிப்பான் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட் ("நிறுவனம்")ன் காகித வடிவில் பங்குகளின் பரிமாற்ற கோரிக்கைகளை மீண்டும் வைப்பதற்கு வசதியாக ஜூலை 7, 2025 முதல் ஜனவரி 6, 2026 வரை ஆறு மாத காலத்திற்கு சிறப்பு பரிமாற்ற பத்திரங்களை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான சிறப்பு சாளரம் திறக்கப்பட்டுள்ளதாக பங்குதாரர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏப்ரல் 01, 2019 அன்று முன்னர் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் / செயல்முறை / அல்லது வேறுவிதமாமகக் குறைபாடு காரணமாக நிராகரிக்கப்பட்ட / திருப்பி அனுப்பப்பட்ட / பராமரிக்கப்படாத பரிமாற்றப் பத்திரங்களை மீண்டும் வைப்பதற்கு மட்டுமே என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த சிறப்பு சாளரத்தில், பரிமாற்றத்திற்காக மீண்டும் பதிவு செய்யப்படும் பங்குகள் டிமேட் முறையில் மட்டுமே வழங்கப்படும். மேலும், பரிமாற்ற மற்றும் டிமேட்டிற்கான உரிய செயல்முறையில் பின்பற்றப்படும். பங்கு பரிமாற்ற பத்திரங்களுக்கான முந்தைய காலக்கெடுவைத் தவறவிட்ட பங்குதாரர்கள் https://wisdom.cameoindia.com என்ற இணைய இணைப்பை பயன்படுத்தி அல்லது investors@inel.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் தேவையான ஆவணங்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் ("RTA")க்கு வழங்குவதன் மூலம் இந்த வாய்ப்பை பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். தகுதியான பங்குதாரர்கள் தங்கள் பரிமாற்ற கோரிக்கைகளை ஜனவரி 06, 2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ இந்த சிறப்பு சாளரத்தின் கீழ் முறையாக பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கேஒய்சி-ஐப் புதுப்பித்து, காகித வடிவிலான பங்குகளை டிமேட் பயன்முறைக்கு மாற்றவும்

பங்குகளை காகித வடிவில் வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் கேஒய்சி-ஐப் புதுப்பிக்குமாறும் தங்கள் பங்குச் சான்றிதழ்களை மின்னணு வடிவத்திற்கு மாற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பங்குதாரர்கள் தங்கள் கோரப்படாத ஈவுத்தொகையை கோரிப்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு தவறும்பட்சத்தில், அத்தகைய கோரப்படாத / செலுத்தப்படாத ஈவுத்தொகை தனிக்கணக்கிற்கு மாற்றப்பட்டதிலிருந்து ஏழு ஆண்டுகள் நிறைவடைந்த பிறகு, முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திற்கு (IEPF), அவர்தம் பங்குகளுடன் மாற்றம் செய்யப்படும்.

மே 07, 2024 தேதியிட்ட செபி சுற்றறிக்கை SEBI/HO/MIRSD/POD-1/P/CIR/2024/37ன்படி பான் எண் மற்றும் முழுமையான கேஒய்சி விவரங்கள் வழங்கப்பட்ட, காகித வடிவில் உள்ள பங்குகளுக்கு 01.04.2024 முதல் ஈவுத்தொகை மின்னணு முறை மூலம் மட்டுமே செலுத்தப்படும்.

இந்தியா நிப்பான் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
S. லோகிதா
கம்பெனி செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 30.12.2025

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).